2012 மே 15] [திரு. எல். வெங்கடேசன்]

தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதிகளிலேயிருந்துதான் செல்கிறது. மேலும் அரகண்டநல்லூர், திருக்கோவிலூர் பகுதிக்கும் இதுதான் நீர் ஆதாரமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சுருக்கமாக, இந்தமாதிரி மணல் குவாரி பிரச்சினை இருக்கிறது என்றும், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் என்றும் சொன்னால், அமைச்சர், அவர்கள் அதற்குப் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.*

திரு. எல். வெங்கடேசன்: *நீராதாரம் குறைந்துகொண்டு வருகிறது. எனவே, அந்தக் குவாரியை நிறுத்த வேண்டுமென அவையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.*

(இ) தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி ஜக்கம்மாதேவி ஆலயத்தில் அரசு விழா இரத்து செய்யப்பட்டதுடன் காவலர்கள் பொதுமக்களைத் தாக்கியதால் ஏற்பட்ட பதற்ற நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி, ஜக்கம்மாதேவி ஆலயத்தில் நடைபெறவிருந்த அரசு விழா இரத்து செய்யப்பட்டு, காவலர்கள் அத்துமீறி நுழைந்து பக்தர்களையும், பொதுமக்களையும் அடித்து, உதைத்து, துன்புறுத்தி கைது செய்ததால் ஏற்பட்ட பதற்ற நிலை குறித்து தங்கள். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். இது என்னுடைய ஆய்வில் உள்ளது.*

(ஈ) வெளிநாட்டில் வாழும் தமிழர்களைப் பாதுகாக்க ஆணையம் ஒன்று ஏற்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த பல இலட்சம் மக்கள் வெளிநாடுகளிலே மாணவர்களாகவும், படிப்பவர்களாகவும் இருந்து*